

இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
செவ்வாய்க்கிழமை 25-02-2025

# முதலமைச்சரின் போர்க்குரல்

கல்விக்காக, பள்ளிக் குழந்தைகளுக்காக, ஆசிரியப் பெருமக்களுக்காக செலவு செய்யும் தொகையைத் தர முடியாது என்று ஆணவத்துடன் இருக்கிறது ஒன்றிய அரசு. இந்த ஆணவத்துக்கு போர்க்குணத்துடன் பதிலடி தந்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.

**“பி.எம்.ஸ்ரீ திட்டத்தை ஏற்காததால் தமிழ்நாடு 5 ஆயிரம் கோடி ரூபாய் இழக்கிறது என்று சொல்லும் ஒன்றிய அமைச்சர் தர்மேந்திர பிரதான் அவர்களே! தமிழ்நாட்டில் இருந்து நீங்கள் வாங்கிக் கொண்டு இருக்கும் வரியைத் தர மாட்டோம்’ என்று சொல்ல எங்களுக்கு ஒரு நொடி போதும்... மறந்துவிடாதீர்கள்”** என்று எச்சரிக்கை செய்துள்ளார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். இதுதான் ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு புரியும் பாணியாகும். அதன்பிறகாவது இப்பிரச்சினையின் தீவிரத்தை புரிந்து கொள்வார்களா என்று தெரியவில்லை.

சமூக வலைத் தளங்களில் முதலமைச்சரின் போர்க்குரலுக்கு மிகுந்த வரவேற்பு இருந்தது மட்டுமல்ல, அதன் நியாயத்தை பலரும் எழுதத் தொடங்கி இருக்கிறார்கள். ஒருவர் சமூக வலைத்தளத்தில் பட்டியலையே பதிவு செய்திருந்தார்.

1. கல்வி நிதி குறைப்பு
2. பட்டியல் பழங்குடியின மேம்பாட்டு நிதி நிறுத்தம்
3. இரயில்வே திட்டங்களுக்கு குறைவான நிதி ஒதுக்கீடு
4. புயல் நிவாரண நிதி மறுப்பு
5. சாலை வளர்ச்சி திட்டங்களில் ஒதுக்கீடு குறைவு
6. மருத்துவமனை அமைக்கும் திட்டங்களில் தாமதம் (எ.கா: மதுரை எய்ம்ஸ்)
7. ஒன்றிய அரசின் மும்மொழிக் கொள்கை காரணமாக தமிழ்மொழிக்கு ஆதரவு குறைவு
8. தேசிய திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைந்த பங்கு
9. தொழில்துறை மானியம் குறைப்பு
10. சுற்றுச்சூழல் தொடர்பான நிதி ஒதுக்கீடு குறைவு
11. நகர்ப்புற மேம்பாட்டு நிதி குறைப்பு
12. கிராமப்புற வளர்ச்சி திட்டங்களில் குறைவான நிதி
13. நீர்ப்பாசன திட்டங்களுக்கு ஒன்றிய அரசின் உதவி இல்லாமல் போனது
14. சிறுபான்மையினர் நலத்திட்டங்களுக்கு ஒதுக்கீடு குறைவு
15. தொழிலாளர்கள் நலத்திட்டங்களில் நிதி குறைப்பு
16. தமிழகத்தில் ஒன்றிய அரசின் புதிய நிறுவனங்கள் ஏற்படுத்த மறுப்பு
17. இயற்கைப் பேரிடர் நிவாரண நிதி குறைப்பு
18. குடிநீர் வசதிக்கான நிதி குறைப்பு
19. தேசிய நெடுஞ்சாலை விரிவாக்கத்தில் மெதுவான செயல்பாடு
20. மாநில திட்டங்களுக்கு ஒன்றிய நிதி ஒதுக்கீட்டில் தாமதம்
21. சென்னை மெட்ரோ இரண்டாம் கட்டத்திற்கான நிதி தாமதம்
22. தேசிய நிறுவனங்களின் தலைமையகம் தமிழ்நாட்டில் அமைக்க மறுப்பு
23. ஒன்றிய அரசின் தொழில் முனைவோர் ஊக்கத்திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைவான ஆதரவு
24. தமிழ்நாட்டிற்கு கடலோரப் பாதுகாப்பு திட்டங்களில் குறைந்த முக்கியத்துவம்
25. ஒன்றிய அரசின் விவசாய நிதி திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு நிதி குறைவு
26. தமிழ்நாட்டில் பாதுகாப்பு உற்பத்தி நிறுவனங்களை அமைக்காமல் தவிர்ப்பு
27. ஒன்றிய நிதி ஆதரவுடன் நடைபெறும் குடிசைப்பகுதி மேம்பாட்டுத் திட்டங்களில் குறைவு
28. தேசிய ஆராய்ச்சி நிறுவனங்களுக்கான ஒன்றிய நிதி ஒதுக்கீடு தமிழ்நாட்டில் குறைவு
29. ஒன்றிய அரசு உதவியுடன் செயல்படும் திறன் மேம்பாட்டு திட்டங்களில் தமிழ்நாட்டிற்கு குறைவான பங்கு
30. மாநிலத்தில் ஒன்றிய கல்வி அமைப்புகள் அமைப்பதில் மேன்மை அடையாத நிலை

- என்று பட்டியலிட்டுள்ளார் அவர். இப்படி சொல்லிக் கொண்டே போகலாம். எதையுமே செய்யாமல் தமிழ்நாட்டையும் உள்ளடக்கி ஆள்வதால் என்ன பயன்?

ஒரு காலத்தில் ஒரு மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர் நரேந்திர மோடி. மாநில முதலமைச்சராக இருந்த போது மாநில சுயாட்சிக்காகக் குரல் எழுப்பியவர்தான் நரேந்திரமோடி. ஆனால் இன்று அவர் அனைத்தையும் மறந்து சர்வாதிகாரத்தனத்துடன் செயல்பட்டு வருகிறார்.

2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 8 ஆம் தேதியன்று பா.ஜ.க. வெளியிட்ட தேர்தல் அறிக்கையில் ....

❖ மறைமுக வரிவிதிப்பில் சீர்திருத்தம் செய்ய அனைத்து மாநில அரசுகளுடனும் ஆலோசனை செய்வோம்.

❖ மாநில முதல்வர்களையும் சமமாகக் கருதி - தேச நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்துவோம்

❖ மாநில அரசுகளுக்கு அதிக அளவில் நிதி அதிகாரங்களை வழங்குவோம்

❖ மாநிலப் பிரச்சினைகளுக்கு தொடர்புடைய மாநிலங்களுக்கு இடையே கவுன்சில் அமைத்து தீர்வு காண்போம் - என்று சொல்லப்பட்டது. அதைச் செய்யுங்கள் என்றுதான் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.

**“குஜராத் மக்கள் ரூ.60 ஆயிரம் கோடியை டெல்லிக்கு அனுப்புகிறார்கள். ஆனால் திரும்ப வருவது மிகக் குறைவு. குஜராத் என்ன பிச்சைக்காரர்கள் மாநிலமா?” என்று 6.12.2012 அன்று குஜராத் முதலமைச்சராக இருக்கும் போது கேட்டவர்தான் மாண்புமிகு நரேந்திரமோடி அவர்கள். அதைத்தான் இன்று தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் கேட்கிறார்கள்.**

**தமிழ்நாட்டு முதலமைச்சர் பேச்சை கேட்க மறந்தாலும், மோடி பேச்சை மோடி கேட்பாரா?**



திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின் சார்பில் தாய்–சேய் நலனை மேம்படுத்தும் வகையில் நடைபெற்ற சமுதாய வளைகாப்பு நிகழ்வில் நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு நேற்று முன்தினம் (23.02.2025) கலந்து கொண்டு கர்ப்பிணி பெண்களுக்கு மங்கலப் பொருட்களான வளையல். மங்கலநாண், மஞ்சள், குங்குமம், வெற்றிலை, பாக்கு, வாழைப்பழம், வேப்பம் காப்பு, மாலை மற்றும் கர்ப்பகாலம் குறித்த துண்டுப் பிரசுரங்களை வழங்கி வாழ்த்தினார். இந்நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் சரவணன், சட்டமன்ற உறுப்பினர் செ.ஸ்டாலின் குமார், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ராஜலட்சுமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குனர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட திட்ட அலுவலர் திருமதி.மா.நித்யா, வட்டார குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர் திருமதி காஞ்சனா, மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அங்கன்வாடி பணியாளர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலை! அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வரவேற்புரை!

# நாகை மாவட்டச் செயலாளர் என்.கௌதமன் இல்லத் திருமண விழா!

## கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமை தாங்கி நடத்தி வைக்கிறார்!

நாகை, பிப். 25 -

நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் இல்லத் திருமண விழா வரும் 3.3.2025 திங்கள்கிழமை காலை 9.00 மணிக்கு கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் தலைமைத் தாங்கி நடத்தி வைக்கிறார்.

நாகை மாவட்டம் நாகை அக்கரைப் பேட்டை வடக்குத்தெரு எஸ்.நல்லதம்பி-சுபத்திரை மகன் வழி பேரனும், ரெத்தின சாமி - செல்லமாள் மகள் வழி பேரனும், நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவருமான என்.கௌதமன் - மறைந்த அருமைக்கண்ணு- கௌசல்யா இணையர்களின் மகன் ஜி.மகிபாலனுக்கும், காரைக்கால் மாவட்டம் காரைக்கால்மேடு ப.அருச்சுணன் - முத்துலெட்சுமியம்மாள் மகன் வழிப்பேரனும், பொ.ரெத்தினம் - அருமைக்கண்ணு மகள் பேத்தியும் ஏ.எஸ்.சரவணன்–சுமித்ரா இணையரின் மகள் எஸ்.உமாமகேஸ்வரி ஆகியோர் திருமணம் நாகை புத்தூர் ஆர்ச் அருகில் கலைஞர் அரங்கில் 3.3.2025 திங்கள்கிழமை நடைபெறுகிறது.

திருமண விழாவிற்கு பள்ளி கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யா மொழி வரவேற்புரையாற்றுகிறார்.

கழக இளைஞர் அணிச் செயலாளர் - துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் முன்னிலை வகித்து மணமக்களை வாழ்த்திப் பேசுகிறார்.

மணமக்கள் ஜி.மகிபாலன் - எஸ்.உமா மகேஸ்வரி திருமணத்தை கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமை தாங்கி நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி பேசுகிறார்.

திருமண விழாவில் கழக பொதுச்செயலாளரும் நீர்வளத்துறை அமைச்சருமான துரை முருகன், கழக பொருளாளர் டி.ஆர். பாலு எம்.பி., கழக முதன்மைச் செயலாளரும், நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என். நேரு, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் இரா.முத்தரசன், கழக துணை பொதுச் செயலாளர்கள் ஊரக உள்ளாட்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி, வனத்துறை அமைச்சர் க.பொன்முடி, ஆ.ராசா எம்.பி., பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு, வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர். கே.பன்னீர்செல்வம், அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், எஸ்.ரகுபதி, மா.சுப்ரமணியன், டி.ஆர்.பி.ராஜா, தங்கம் தென்னரசு, கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், சிவ.வீ.மெய்யநாதன், எஸ்.எஸ். சிவசங்கர், அர.சக்கரபாணி, வே.செந்தில் பாலாஜி, பி.கே.சேகர்பாபு, கே.ஆர்.பெரிய கருப்பன், கோவி.செழியன், பி.டி.ஆர்.பழனிவேல் தியாகராஜன், ஆவடி சா.மு.நாசர், ஆர்.காந்தி, பி.மூர்த்தி, சு.முத்துலெட்சுமி, மு.பெ.சுவாமிநான், ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன், பி.கீதாஜீவன், சி.வி.கணேசன், மா.மதிவேந்தன், கயல்விழி செல்வராஜ், இரா.ராஜேந்திரன்,

தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி, மாநில விவசாய அணி செயலாளர் ஏ.கே. எஸ்.விஜயன், தாட்கோ தலைவர் உ.மதிவாணன், மாவட்டக் கழகச் செயலாளர்கள் தஞ்சை வடக்கு சு.கல்யாணசுந்தரம், திருவாரூர் பூண்டி கே.கலைவாணன், மயிலாடுதுறை நிவேதா எம்.முருகன், தஞ்சை மத்திய துரைசந்திரசேகரன், திருச்சி வடக்கு காடுவெட்டி ந.தியாகராசன், புதுக்கோட்டை வடக்கு கே.கே.செல்லபாண்டியன், இராமநாதபுரம் முத்துராமலிங்கம், சேலம் மேற்கு டி.எம்.செல்வகணபதி, திருச்சி மத்திய க. வைரமணி, கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, கழக இணை அமைப்புச் செயலாளர் அன்பகம் கலை, தமிழ்நாடு அரசின் குற்றவியல் வழக்கறிஞர் ஏ.அசன் முகமது ஜின்னா, அறிவாலயம் மேலாளர் ஆர்.பத்மநாதன், தலைமை நிலையச் செயலாளர் பூச்சிமுருகன், துணை அமைப்பு செயலாளர் எஸ்ஆஸ்டின், தலைமைக் கழக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன்,

சட்டத்துறை இணைச் செயலாளர்கள் கே.எஸ்.ரவிச்சந்திரன், சூர்யா வெற்றிக் கொண்டான், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் குத்தாலம் பி.கல்யாணம், நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்.ஆர்.இளங்கோ, எம்.எம்.அப்துல்லா, வை.செல்வராஜ், முரசொலி, மு.சண்முகம், காரைக்கால் மாநில செயலாளர் ஏ.எம்.எச். நாஜிம், சட்டமன்ற உறுப்பினர்கள் துரைசந்திரசேகரன், சீர்காழி எம்.பன்னீர்செல்வம், தஞ்சை துரை.சந்திரசேகரன், சாக்கோட்டை க.அன்பழகன், கே.பி.பி.சங்கர், ஈ.பரந்தாமன், எஸ்.அரவிந்த்ரமேஷ், டி.கே.ஜி. நீலமேகம், என்.அசோக்குமார், நாக.தியாகராஜன், ஆளூர் ஷா.நவாஸ், நாகை மாலி, எஸ்.ராஜ்குமார், கே.மாரிமுத்து,

திருச்சி மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், துணை மேயர் சு.ப.தமிழழகன், தஞ்சை மாநகராட்சி மேயர் சன்.ராமநாதன், துணை மேயர் அஞ்சுகம்பூபதி, மாநில விவசாய அணி துணைத்தலைவர் எஸ்.கே.வி.வேதரத்தினம், மாநில தீர்மான குழு உறுப்பினர் என்.வி.காமராஜ், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர் என்.இளையராஜா, தகவல் தொழில் நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் பி.எம்.ஸ்ரீதர், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் ப.கோவிந்தராசன், க.இராஜேந்திரன், இல.மேகநாதன் க.மறைமலை, மாவட்டக் கழக நிர்வாகிகள் ப.செல்வம், மு.லோகநாதன், சோ.ரவிச்சந்திரன், ஆரூர்.மணிவண்ணன், கற்பகம் நீலமேகம்,

மாநில மீனவர் அணி துணைச் செயலாளர் ஜி.மனோகரன், மாநில சிறுபான்மை அணி துணைச் செயலாளர் மு.சாகுல்ஷமீது, சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் அ.அசோகன், சட்டமன்ற தொகுதி பொறுப்பாளர்கள் ஆர்.அருள்செல்வம், இரா.சங்கர், வி.ஜெயபிரகாஷ், ஒன்றியக் கழகச் செயலாளர்கள் செல்வ.செங்குட்டுவன், மகாகுமார், ஆ. தாமஸ் ஆல்வா எடிசன், ஆர்.டி.எஸ்.சரவணன், கா.பழனியப்பன், என்.சதாசிவம், சிக்கல் என்.ஆனந்த், உதயம் வே.முருகையன், சோ.பா.மலர்வண்ணன், நகரக் கழகச் செயலாளர்கள் மா.மீ.புகழேந்தி, எம்.ஆர்.செந்தில்குமார், பொதுக்குழு உறுப்பினர்கள் கே.பாண்டியன், எஸ்.பி.டி. சார்லஸ், கோ.சிவக்குமார், எல்.எஸ்.ஈ. பழனியப்பன், எஸ்.பன்னீர்செல்வம், இல.பழனியப்பன், உமாசெந்தாமரைச்செல்வன்,

மாவட்ட அறங்காவலர் குழு தலைவர் சி.நாகரெத்தினம், பேரூர் கழகச் செயலாளர்கள் கா.அட்சயலிங்கம், மரியசார்லஸ், சி.சுப்பரமணியன், எம்.முகமது சுல்தான், பேரூராட்சி தலைவர்கள் ஏ.எல்.டயானா சர்மிளா, இந்திராகாந்தி சேகர், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், மயிலாடுதுறை, தஞ்சை, திருவாரூர் மாவட்டக் கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள், கூட்டணி கட்சி தலைவர்கள், நகர்மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக நிர்வாகிகள், கழகத்தினர் கலந்து கொள்கின்றனர்.

முடிவில் நாகை நகர்மன்ற தலைவரும், நாகை நகரக் கழகச் செயலாளருமான இரா.மாரிமுத்து நன்றி கூறுகிறார்.



திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் அனைத்து துறை அலுவலர்களுடன் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், திருப்பூர் மேற்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன், மனித வள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணைச் செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், மாநகராட்சி ஆணையாளர் எஸ்.ராமமூர்த்தி, மாவட்ட வருவாய் அலுவலர் க.கார்த்திகேயன், மாவட்ட ஊரக முகமையின் திட்ட இயக்குநர் கோ.மலர்விழி, இணை பதிவாளர் (கூட்டுறவு சங்கங்கள்) பிரபு மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.